**துணை ஆணையாளர் –1(பொ), உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சேப்பாக்கம், சென்னை–5, அவர்களின் செயல்முறைகள்**
**<u>முன்னிலை: திருமதி.எஸ். சாந்தா</u>**

**செ.மு.ஆணை எண்.அ4/ 20879 / 2023** **நாள்: 11.11.2024**

பொருள்: நியமனம் (நேரடி) – உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை – நிர்வாகம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் பணித்தொகுதி–IV – (தேர்வு நடைபெற்ற நாள் 24.07.2022) – இளநிலை உதவியாளர் பட்டியல் பெறப்பட்டது – பணி நியமனம் வழங்கப்பட்டது – தமிழ்வழிக்கல்வி (PSTM) உண்மைதன்மை சான்று பெறப்பட்டது–பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல்.

பார்வை:
1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண்.1925/PSD- D2/2023, நாள்: 31.08.2023.
2. துணை ஆணையாளர்–1, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அவர்களின் செயல்முறை ஆணை எண். அ4/20879/2023, நாள் : 21.09.2023.
3. துணை ஆணையாளர்–1, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அவர்களின் செயல்முறை ஆணை எண். அ4/20879/2023, நாள் : 28.12.2023.
4. இவ்வலுவலக கடித ந.க.எண்.அ4/20879/2023, நாள்:28.12.2023 22.03.2024, 02.05.2024, 15.07.2024, 19.08.2024 மற்றும் 23.09.2024.
5. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணி திட்டம்) பள்ளிக்கல்வித் துறை, டி.பி.ஜ வளாகம், கல்லூரி சாலை,நுங்கம்பாக்கம், சென்னை–600006 அவர்களின் செயல்முறை ந.க.எண்.030574/எம்/இ1/2021, நாள்:17.05.2024.
6. முதன்மைக் கல்வி அலுவலர், கடலூர் மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண்.1526/ஆ5/2024, நாள்:10.06.2024.
7. முதன்மைக் கல்வி அலுவலர், தருமபுரி மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண்.1864/அ1/2024, நாள்:06.08.2024.
8. முதன்மை கல்வி அலுவலர் திருவண்ணாமலை மாவட்டம், அவர்களின் கடித எண். 5708/அ1/2024, நாள் : 15.10.2024. (இவ்வலுவலகத்தில் கடிதம் கிடைக்கப்பெற்ற நாள் : 22.10.2024.) (இப்பிரிவில் கடிதம் கிடைக்கப்பெற்ற நாள் : 25.10.2024.)

*****

**<u>ஆணை:</u>**

பார்வை–1ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தின் வாயிலாக, இத்துறைக்கு இளநிலை உதவியாளர் பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்வரும் பணியாளர்களுக்கு பார்வை–2ல் காணும் செயல்முறை ஆணையின் வாயிலாக இத்துறையின் காலியாகயிருந்த இளநிலை உதவியாளர் பதவிக்கு பணிநியமனம் வழங்கி ஆணையிடப்பட்டது.

| வ.எண் | பெயர்(தி/ள்) மற்றும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1. | V .அருண், இயக்குநர் இலுவலகம். | 27.09.2023 மு.ப |
| 2. | S.சுரேஷ்குமார், இயக்குநர் இலுவலகம். | 27.09.2023 மு.ப |
| 3. | S.செந்திலா,உதவி ஆணையாளர் அலுவலகம், சோழங்கநல்லூர் மண்டலம். | 27.09.2023 மு.ப |

மேலும், பார்வை–1ல் காணும் தேர்வாணைய கடிதத்தில் அட்டவணையில் இடம்பெற்றுள்ள பணியாளர்கள் தமிழ்வழி (PSTM) இடஒதுக்கீட்டின்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் தமிழ்வழியில் கல்வி பெற்றுள்ளாரா என்பதனை உரிய அதிகாரியிடமிருந்து அறிக்கையினை பெற்று சரிபார்க்க வேண்டும் எனவும் தமிழ்வழி கல்வி ஒதுக்கீட்டின்படி தெரிவு செய்யப்பட்ட பணியாளர்கள் தமிழ்கல்வி (PSTM) குறித்த விவரத்தினை இயக்குநர், பள்ளிக்கல்வித் துறை அவர்களிடமிருந்து சரிபார்க்க வேண்டும் எனவும் அதனடிப்படையில் தமிழ்வழி கல்வித்தகுதியின் உண்மைதன்மை அறிக்கை பெறப்பட்ட பின்னரே பணிவரன்முறை செய்யப்பட வேண்டும் எனவும், அறிக்கை பெறப்படாத வரை பணியினை வரன்முறை செய்யக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் மேற்படி பணியாளர்களைத் தவிர இதர பணியாளர்களுக்கு பார்வை–3ல் காணும் செயல்முறை ஆணையில் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்பட்டது.

மேற்படி பணியாளர்கள் பொருட்டு, பார்வை–4ல் காணும் இவ்வலுவலக கடிதங்களில், பணியாளர்களின் தமிழ்வழி பயின்றதற்கான உண்மைத்தன்மை கல்விச் சான்றினை அனுப்பி வைக்க பள்ளிக் கல்வித்துறை இயக்குநரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது

இந்நிலையில், பார்வை–6 முதல் 8 வரை காணும் சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களின் கடிதங்களில், இத்துறையில் பணிபுரியும் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.V.அருண், திரு. S.சுரேஷ்குமார் மற்றும் திருமதி.S.செந்திலா ஆகியோர் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழ்வழியில் கல்வியில் (PSTM) பயின்றுள்ளார் என்று உண்மைத்தன்மை சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி பணியாளர்களது பணி, இளநிலை உதவியாளர் பதவியில் மேற்படி அட்டவணையில் அவர்களுக்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில், சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் பணித்தொகுதி–IV பணிநியமனம் குறித்த நிலுவையிலுள்ள வழக்குகள் மற்றும் ரிட் மனுக்களில் பிரகடனப்படுத்தப்படும் தீர்ப்பு முடிவுகளுக்கு உட்பட்டு நிபந்தனை அடிப்படையில், பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

"The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras /Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination-IV (Group IV)"

பணிவரன்முறை செய்யப்படும் தேதியிலிருந்து மூன்றாண்டு கால தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவ காலத்தில் வைத்தும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மேலும், தகுதிகாண் பருவகாலத்திற்குள், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகரில் நடைபெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

துணை ஆணையாளர்–1 (பொ)

12/11/24

பெறுநர்

சம்பந்தப்பட்ட பணியாளர்கள்.

(உரிய அலுவலர் மூலமாக)

நகல்

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
   கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
   தலைமைச் செயலகம், சென்னை – 09.
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப்
3. பணியாளர் தேர்வாணையம்,
   3,தேர்வாணையச் சாலை, வ.ஊ.சி நகர், சென்னை – 600 003.
4. அரசுச் செயலாளர்,
   பள்ளிக் கல்வித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–09.
5. இயக்குநர் / இணை ஆணையாளர் அவர்களின் மேசைக்கு.
6. பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணி திட்டம்),
   பள்ளிக்கல்வித் துறை, டி.பி.ஐ வளாகம், கல்லூரி சாலை,
   நுங்கம்பாக்கம், சென்னை–600006
7. அனைத்து அலுவலர்கள், இயக்குநர் அலுவலகம்,
8. துணை ஆணையாளர் (ந) தெற்கு,
9. முதன்மைக் கல்வி அலுவலர்கள், கடலூர்/தருமபுரி / திருவண்ணாமலை மாவட்டங்கள்
10. உதவி ஆணைபாளர், சோழங்கநல்லூர் மண்டலம்.
    (வ.எண் 3ல் இடம்பெற்றுள்ள பணியாளருக்கு சார்வு செய்து அவ்விவரத்தினை அசலாக அனுப்பிடவும், மேலும் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொண்டு அவ்விவரத்தினை தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்).
11. கண்காணிப்பாளர், ‘ச’ பிரிவு, இயக்குநர் அலுவலகம், (வ.எண் 1 (ம) 2 ல் இடம்பெற்றுள்ள பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டு அதன் விவரத்தினை தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது).
12. ஆணையாளர் அலுவலக தகவல் பலகைக்கு.
13. ‘அ4’ இருப்பு கோப்பு.